தீக்கதிர்
25.04.2024

சிறுபான்மையினர் குறித்து வெறுப்புப் பிரச்சாரம்

# பிரதமர் மீது நடவடிக்கை எடுக்க மதுரை குடிமைச் சமூக அமைப்புகள் கோரிக்கை

## மாவட்ட தேர்தல் அலுவலரிடம் நேரில் மனு அளிப்பு

மதுரை, ஏப்.24-

இந்தியப் பிரதமரின் வெறுப்புப் பிரச்சாரம் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரையைச் சேர்ந்த குடிமைச் சமூக அமைப்புகள், மதுரை மாவட்ட தேர்தல் அலுவலரிடம் மனு அளித்து, இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது இந்திய நாட்டின் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கிற வகையில் பேசியும் நாடெங்கும் விஷமத்தனமான பொய்யை கூறியும் வருகிற பிரதமர் மோடிக்கு குடிமை சமூக அமைப்புகள் நாடு முழுவதும் தங்களது கடும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றன. பெரும்பான்மை இந்து வாக்குகளை குறி வைத்து சிறுபான்மையினருக்கு எதிராக வெறுப்பைத் தூண்டியும்.



சமூக ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பிரச்சார மேடையில் உரையாற்றி வரும் பிரதமர் மோடி மீது தேர்தல் ஆணையம்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுபோன்ற வெறுப்புப் பேச்சு குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய இந்திய தேர்தல் ஆணையம் மௌனம் காப்பது கவலையளிக்கிறது. இந்தியாவிலுள்ள குடிமைச் சமூக அமைப்புகள் ஒன்றாக இணைந்து, அனைத்து மாநில தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோரை ஏப்ரல் 23 அன்று நேரில் சந்தித்து தேர்தல் நடத்தை விதிகளின் படி இந்திய பிரதமர் மோடி மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிலையில் மதுரையைச் சேர்ந்த குடிமைச் சமூக அமைப்புகள் ஒன்றாக இணைந்து ஏப்ரல் 24 அன்று, மதுரை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான சங்கீதாவை நேரில் சந்தித்து இந்திய பிரதமர் மோடி மீது உரிய நடவடிக்கையை எடுக்கக்கோரிய மனு, இந்திய அரசமைப்பின் முகப்புரை, தேர்தல் நடத்தை விதிகள் உள்ளிட்டவற்றை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புமாறு வழங்கப்பட்டது.

மக்கள் சிவில் உரிமைக் கழகம், நாட்டைக் காப்போம், தமிழ்நாடு பொது மேடை, மக்கள் கண்காணிப்பகம் ஆகிய அமைப்பினரும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட சிலரும் சேர்ந்த குழுவினர் இந்த மனுவை வழங்கினர்.